THE ROMAN BATHS BATH

# ரோமானியக் குளங்களைப் பார்வையிடுதல்

ரோமானியக் குளங்கள் வட ஐரோப்பாவில் உள்ள சிறந்த பாதுகாக்கப்பட்ட தொல்பொருளாய்வு சார்ந்த தலங்களில் ஒன்றாகும்.
பெரும்பாலான மக்கள் இங்கு 1½மணிநேரத்தைச் செலவிடுகின்றனர்.
உங்கள் வருகையை நீங்கள் அனுபவிப்பீர்கள் என நம்புகிறோம்.

உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால், பணியாளர் ஒருவரைக் கேளுங்கள்.

இலவச வழிகாட்டிச் சுற்றுலாக்கள் பெரிய குளத்துக்குப் பக்கத்தில் இருந்து ஒவ்வொரு மணிநேரமும் தொடங்குகின்றன. இந்தச் சுற்றுலாக்கள் 30-40 நிமிடங்களுக்கு நீடிக்கின்றன. மேலும், இவை ஆங்கிலத்தில் வழிநடத்தப்படுகின்றன.

இங்கு இரண்டு ரோமன் பாத்ஸ் கடைகள் உள்ளன. உங்கள் வருகையின் இறுதியில் நீங்கள் சிற்றுண்டி அருந்திப் புத்துணர்ச்சி பெறுவதற்கு, 18ஆம் நூற்றாண்டின் பம்ப் அறைக்குச் செல்லுங்கள்.

தயவுசெய்து குளங்களில் உள்ள தண்ணீரைக் குடிக்க வேண்டாம்! குடிப்பதற்கான மருந்துநீரூற்று (ஸ்பா) தண்ணீர், பம்ப் அறையில் கிடைக்கிறது.

உணவு உண்ணுதல், நீர் அருந்துதல், சூவிங் கம் மற்றும் புகைத்தல் ஆகியவை தலத்தில் அனுமதிக்கப்படவில்லை என்பதை தயவுசெய்து நினைவில் கொள்க.

## சுடுநீர்

குளத்தில் மூன்று வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. இத்தலத்தில் உள்ள மிகப் பெரிய ரோமானியப் புனித நீரூற்று, c3000m ஆழத்தில் இருந்து பீறிட்டு உயர்கிறது. இத்தண்ணீரில் 43 தாதுக்கள் உள்ளன. ஒவ்வொரு நாளும் தண்ணீர் 46.5°C என்ற நிலையான வெப்பநிலையில் 1,250,000 லிட்டர் அளவிற்குப் பாய்ந்தோடுகிறது. இந்த வெந்நீரூற்றைச் சுற்றி ரோமானியக் குளங்களும் கோவிலும் கட்டப்பட்டுள்ளன.

## ரோமானியத் தோற்றம்

குளத்தில் உள்ள ரோமன் ஸ்பா (அக்வா சுலிஸ்), கி.பி. 43 இல் பிரிட்டனின் ரோமானியப் படையெடுப்புக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இது கி.பி. 75 -இல் இங்கு இருந்ததாக ஒரு கல்வெட்டிலிருந்து நாம் அறியலாம். கெல்டிய நீரூற்றுக் கடவுளான சுலிஸ் (Sulis) -இன் பெயர் இதற்குச் சூட்டப்பட்டுள்ளது. இவர் ரோமானியப் பெண் கடவுளான மினர்வாவுக்குச் (Minerva) சமமாக பாவிக்கப்பட்டவர். சுலிஸ் மினர்வா ஆலயத்தை உள்ளடக்கியிருக்கும் ஒரு தூணணி வட்டாரம், நீரூற்றின் வடக்கே அமைக்கப்பட்டுள்ளது. அதற்குத் தெற்கே, சுத்திகரிப்பு மற்றும் நோய் தீர்க்கும் குளங்கள் கட்டப்பட்டுள்ளன. இப்புனித நீரூற்று ஒரு இரட்டை நோக்கத்திற்காகச் சேவை புரிந்தது. இது வழிபாட்டிற்காக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இதில் சுலிஸ் மினர்வாவிற்குக் காணிக்கைகள் வீசப்பட்டன. மேலும், இது குளங்களுக்குச் சுடுநீரை வழங்குகின்ற ஒரு நீர்த்தேக்கமாகவும் இருந்தது. இது ஒரு புனித இடமாக இருப்பதால், இதில் யாரும் குளிக்கவில்லை.

## பிறகு ஏற்பட்ட வளர்ச்சி

ரோமானியர்கள் வெளியேறிய பிறகு, பாஃகன் (Pagan) கோவில் அழிக்கப்பட்டது. குளங்கள் இடிந்து பூமியில் புதைந்தன. மன்னரின் குளம் 12வது நூற்றாண்டில் புதிய நீரூற்றுக்கு மேலேயே கட்டப்பட்டது. அது நோய் தீர்க்கும் குளியலுக்காகவும், நீச்சலுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டில், மருத்துநீரூற்று தண்ணீரைக் குடிப்பது பிரபலமடைந்தது. இந்த நோக்கத்திற்காக மன்னரின் குளத்திற்குப் பக்கத்தில் பம்ப் அறை கட்டப்பட்டது. 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரோமானியக் குளங்களின் பகுதி முதல்முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது, ஆனால் ரோமானியத் தலத்தின் அளவையும் அளவீட்டையும் புரிந்துகொள்ளமுடியவில்லை. 1880களில் தான் ரோமானியக் குளங்களின் பெரும்பகுதி தோண்டியெடுக்கப்பட்டு, அத்தலத்தின் உண்மையான அளவு வெளியுலகிற்குத் தெரியவந்தது.

## காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளவை

ரோமானிய பிரிட்டனின் மிகவும் பிரபலமான பொருட்களில் சிலவற்றை இங்கு காணலாம். கவனிக்க வேண்டிய சிறப்பு விஷயங்கள்: கோவிலில் இருந்த கோர்கனின் முக்கோணத் தலைக்கட்டு; பெண் கடவுள் சுலிஸ் மினர்வாவின் தங்க முலாம் பூசப்பட்ட வெண்கலத் தலை மற்றும் புதிய நீரூற்றில் இருந்து தோண்டிக் கண்டறியப்பட்ட பொருட்கள். ரோமானியப் பேரரசு முழுவதிலும் இருந்து மருத்துநீரூற்றுக்கு வருகை தந்த இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களைப் பதிவுசெய்கின்ற பீடங்கள், நடுகற்கள் ஆகியவற்றை மற்ற காட்சிப்பொருட்கள் உள்ளடக்குகின்றன.

## ரோமானியக் குளங்களின் கீழ் மாடம்




1 புனித நீரூற்று
2 நீரூற்றில் இருந்து கண்டறியப்பட்ட பொருட்கள்
3 கோவில்
4 கோவிலின் முற்றம்
5 ரோமானிய பிரிட்டனின் பொருள்கள் 6 நீரூற்று பொங்கி வழிந்தோடுதல்
7 சிறிய கடை
8 பெரிய குளம்
9 கிழக்கு குளங்கள்
10 மேற்கு குளங்கள்

## கோவிலின் முற்றம் (4)

புனித நீரூற்றுக்கு அழைத்துச் செல்கின்ற நடைவழியில், சுலிஸ் மினர்வாவுக்குக் காணிக்கையாக வழங்கப்படும் பல நாணங்கள், சாபங்கள் மற்றும் பிற காணிக்கைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை 1878 மற்றும் 1979-80 -இல் புனித நீரூற்றில் கண்டுபிடிக்கப்பட்டன. பம்ப் அறைக்கு கீழே உள்ள பகுதி 1981-83 -இல் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதில், கோவிலின் முன்புறத்தில் நடைபாதையுடன் கூடிய ரோமானிய முற்றமும், கோவிலின் சில படிகளும் கண்டறியப்பட்டன. இது உண்மையில் திறந்த வெளியில் இருந்தது. கோவிலின் உள்ளே செல்ல முடியாது. பலிபீடத்தின் ஒரு பகுதி இங்கு மீண்டும் கட்டப்பட்டுள்ளது. கோவிலில் நின்று கொண்டிருந்த மினர்வாவின் தங்க முலாம் பூசப்பட்ட ஆளுயரத் தலை, கோவிலின் படிக்கட்டுகளுக்கு அருகே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## குளங்கள்

**புனித நீரூற்று (1)**, வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கட்டப்பட்டிருந்த ரோமானிய நீர்த்தேக்கத்தினுள் பாய்கிறது. ரோமானியர்கள் நீரூற்றை வளைவு மேற்கூரையைக் கொண்டு மூடியிருந்தனர். ரோமானியர்கள் வெளியேறிய பிறகு, அந்த மேற்கூரை இடிந்து நீரூற்றில் விழுந்துவிட்டது. 1100 வாக்கில், எஞ்சியிருந்த ரோமானியர்களால் மன்னரின் குளம் கட்டப்பட்டது. இது பல முறை மாற்றியமைக்கப்பட்டது. இன்று நீங்கள் பார்ப்பது 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் முதன்மையாக இருந்ததாகும். செம்மஞ்சள் நிறக் கறையானது, முன்னர் இருந்த தண்ணீர் மட்டத்தைக் குறிக்கிறது. இன்று, தண்ணீர் அளவானது ரோமானியர்கள் பராமரித்த மட்டத்தில் பராமரிக்கப்படுகிறது.

நீரூற்றில் இருக்கும் வெப்பமான தாதுத் தண்ணீரைக் கொண்டு **பெரிய குளம் (8)** நிரப்பப்படுகிறது. இதைச் சுற்றிலும் படிக்கட்டுகள் உள்ளன. இதன் ஆழம் 1.60 மீட்டராகும். இது இன்னமும் ரோமானிய காரீயத்தைக் கொண்டு மூடப்பட்டுள்ளது. ரோமானியர்கள் இதன் மீது மிகப்பெரிய கல்கட்டு உருளைக் காப்பறையைக் கட்டினார்கள். இதன் பாகங்களைக் குளத்திற்குப் பக்கத்தில் காணலாம். இருபுறமும் மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குளிப்பவர்கள் நீரின் விளிம்பில் இருந்து விலகி அங்கு அமர்ந்து உரையாடலாம். ஒரு நீரூற்று, வடக்குப் பகுதி நெடுக பாதி வழியில் அமைந்துள்ளது.

**கிழக்குக் குளங்கள் (9)**உண்மையில் இரண்டு சிறிய குளங்களைக் கொண்டிருந்தன. இதற்கு பெரிய குளத்தில் இருந்து வெந்நீர் வழங்கப்பட்டது. அவை 350 ஆண்டுகளில் பல முறை நீட்டிக்கப்பட்டன மற்றும் மீண்டும் உருவாக்கப்பட்டன. மொசைக்குளால் அலங்கரிக்கப்பட்ட கான்கிரீட் தளங்கள், அடிநிலைவெப்பறையின் (தளத்திற்குக் கீழே சூடாக்குதல்) தூண்களை ஆதரிக்கின்றன. அவற்றில் இப்போது ஒன்று மட்டுமே எஞ்சியுள்ளது. சிறிய அரை-வட்டக் குளத்தில், பார்வையாளர்கள் கல் பெஞ்சில் அமர்கின்றனர். மேலும், நீரூற்றில் இருந்து ஒரு காரீயக் குழாயின் உதவியுடன் தண்ணீரில் கழுத்து வரை இறங்கி நனைகின்றனர்.

**மேற்கு குளங்கள் (10)**, குளிர்ந்த சுற்று வடிவிலான குளத்தைக் கொண்டிருக்கின்றன. இவை உண்மையில் குளங்களுக்கான பிரதானக் கூடமாக இருந்தன. அதற்குப் பிறகு, இந்தச் சுற்று வடிவடிலான குளமானது, குளிப்பவர்கள் அதற்கடுத்துள்ள சூடுபடுத்திய அறைக்குச் செல்வதற்காக கோல்டு ப்ளஞ்-க்காகக் (Cold Plunge) கட்டப்பட்டது. கிழக்கு குளங்களைப் போலவே இவையும் நீராவி அல்லது துருக்கியக் குளங்களாக இருந்தன. அடிநிலைவெப்பறையின் ஒரு சிறந்த உதாரணத்தை இங்கு காணலாம். இந்த வரிசை முறையில் நீங்கள் காண முடியும் கடைசி குளமானது, மற்றொரு கோல்டு ப்ளஞ் குளமாகும்.

குளங்களில் இருந்து வெளியேறும் வழியானது நேராக கழிப்பறைகள், ரோமன் பாத்ஸ் கடை மற்றும் பம்ப் அறைக்குச் செல்கிறது. பம்ப் அறையில் மருந்துநீரூற்றை அல்லது சிற்றுண்டிகளைப் பெறலாம்.